**டிசம்பர் 18**

## *புனித காசியான்*

இவர் 3-ஆம் நூற்றாண்டின் மத்தியில் புனித தியோனிசியுஸ் என்பவரோடு ரோமையிலிருந்து பிரான்ஸ் நாட்டிற்குச் சென்று வேதம் போதித்தார். தூர்ஸ் நகரில் மறை மாவட்டத்தின் தலைமை ஸ்தானத்தை நிறுவினார். அங்கு விக்கிரக ஆராதனை செய்து வந்தவர்களில் அநேகர் மனந்திரும்பினார்கள். அவிசுவாசிகள் கோபாவேசங்கொண்டு இவரைக் கொல்லத் தேடினார்கள். இவர் காட்டிற்கு ஓடிப்போய் அங்கு விசுவாசிகளைத் திரட்டி, குகைகளில் திருப்பலி நிறைவேற்றினார். ஆபத்துக்களின் மத்தியில் 50 ஆண்டுகள் உழைத்து அமைதியாக இறந்தார்.

இவர் வாழ்ந்த இடத்தைப் பல ஆண்டுகளுக்குப் பின் கண்டுபிடித்தார்கள். இவரது உடல், குகையில் பூமியினடியில் புதைக்கப்பட்டிருந்தது. அக்குகையை நம் புனிதரே தம் கைகளால் தோண்டி எடுத்திருந்தார் என்று சொல்கிறார்கள். அதிலிருந்த சிற்றாலயத்தை இவர் புனித கன்னிமரியாளுக்கு அர்ப்பணம் செய்திருந்தார். உரோமை சுரங்கங்களில் கிறிஸ்தவர்கள் செய்தது போல இங்கும் விசுவாசிகள் சந்தித்து திருப்புகழ் பாடி திருப்பலி கண்டு திவ்விய நன்மை வாங்கிவந்தனர்.

**சிந்தனை:**

இவர் வேதத்திற்காக துன்புற்றார். தப்பிக்கும்படி காட்டிற்கு ஓடிச்சென்றார். அங்கேயும் ஏராளமான நன்மைகளைச் செய்தார். நாமும் எவ்விடத்திலிருந்தாலும், உடலை விட்டு உயிர் பிரியும் வரை நன்மை செய்யலாம்.

**செபம்:**

ஆண்டவரே, நீர் தந்திருக்கும் திறமைகளையும் செல்வாக்கையும் பயன்படுத்தி நாங்கள் ஏராளமாய் நன்மை செய்ய துணை புரியும்.